ஏந்தல் இராமனுக்கு ஏழையின் சேவை



ஸ்ரீ ராமகதா ரத்னம்

V. தியாகராஜன்

சேவைகள் பற்றிய விவரங்கள்

1987

ஸ்ரீ

இராமன் தந்த இன்னருள்

பேரன்புடையீர்!

நமஸ்காரம். ஆங்கிலம் படித்து உத்தியோகத்திற்குச் சென்ற என்னை - என் முன்னோர்கள் யாவரும் வித்வான்கள்- அதிலும் வம்ச வழியாகவே இராமாயணம் முதலானவற்றைச் சொற்பொழிவு செய்தவர்கள் என்பதாலோ அல்லது ஏதோ தெய்வீக காரணத்தால் என் வாழ்வும் பிரசங்கம் செய்தே கழிக்குமாறு திருவருள் கூட்டிவைத்து விட்டது. 1939-ல் நான் வளர்ந்த மதுரையில் தற்செயலாக வைகையில் நீராடும்போது 108 முறைகள் கம்பராமாயணம் பிரசங்கம் செய்யவேணுமென்ற எண்ணம் ஏற்பட்டது. எனது வித்யாகுருவான உயர்திரு உவே. ஸ்ரீமான் பூஜ்யஸ்ரீ என். ஆர். கிருஷ்ணசுவாமி ஐயங்கார் அவர்களின் ஆசியாலும் என் முன்னோர்கள் செய்த தவப்பயனாலும் ஸ்ரீ ராமபிரானின் கருணையும் தமிழன்னையின் அடியேனது 108 வது கம்பராமாயணப் பிரசங்கம் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தில் 24-6-1956 அன்று பூர்த்தியடைந்தது. அடியேனது 105 வது கம்பராமாயணம் கங்கை நதிக்கரையில் 16-4-1956 முதல் 2-5-1956 வரை பூஜ்யஸ்ரீ சிவானந்த சுவாமிகள் சன்னதியில் நடைபெற்றுப் பூர்த்தியானபோது அவர்களது ஆசியுடன் அவர்கள் முன்னிலையில் இரண்டாவது 108 (அதாவது 216 வது தடவைகள் வரை) கம்பராமாயணப் பிரசங்கம் செய்வதாக பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு அது 13-6-1967 அன்று அரக்கோணம் திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 216 வது பட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாயிற்று. என் தாயகமான கோயம்புத்தூர் ஜில்லாவில், பவானி-காவிரி - அமிர்தா நதிகள் கூடுமிடத்தில் 22-6-1967 அன்று மூன்றாவது 108 முறைகள் கம்பராமாயணம் செய்வதாகப் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டு அது சென்னை ராஜா அண்ணாமலை புரத்தில் உள்ள ஸ்ரீஸ்ருங்கேரி பிரவசன மந்திரத்தில் 27-7-1982 முதல் 11-8-1982 வரை நடைபெற்ற 324-வது ஸ்ரீராமபட்டாபிஷேகத்துடன் பூர்த்தியாயிற்று.

108 பட்டாபிஷேகங்கள் பூர்த்தியாக 14 வருடங்களாகின்றன. சிறிது தளர்ச்சி ஏற்பட்டுள்ளதால் அடுத்த 108

செய்கிறேன் எனப் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவில்லை. 365 பட்டாபிஷேகங்களாவது முடிக்கலாமென ஓர் ஆவல் ஏற்பட்டுள்ளது. அன்பர்களும் இராமபிரானும் நிறைவேற்றி வைக்கவேணும்.

என் முன்னோர்களின் தவமும், என் வித்யாகுருவான உயர்திரு என். ஆர். கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்களின் ஆசியும் எங்கள் குலகுருவான ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம் சங்கராசார்ய மகா சன்னிதானம் என்னைச் சென்ற 35 வருடங்களாக அனுக்ரகம் செய்து ஆசிகூறி ஆதரித்து வரும் ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடம் சங்கராசார்ய மகா சன்னிதானம் ஆகிய பெரியோர்களின் அருள் மழை காரணமாகவே எளியேனும் 324 பட்டாபிஷேகங்கள் செய்யுமாறு பேறு கிடைத்து இராமனருள் பெற முடிந்தது.

சென்ற சுமார் 45 வருடங்களுக்கு மேலாக எனது வாழ்க்கையின் குறிக்கோளை நான் அடைய உதவிய நம் நாட்டு அன்பர்கள் யாவருக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்வதோடு அவர்கள் அனைவரது நல்வாழ்விற்கும் இராமபிரானை வேண்டி வணங்குகிறேன். என் சேவையை மேன்மேலும் பயன்படுத்திக் கொள்ளுமாறு யாவரையும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

அடியேனது வருங்காலத் திட்டம்

மூப்புத் தலை காட்டுவதன் காரணமாகச் சிறிது தளர்ச்சி ஏற்பட ஆரம்பித்துள்ள போதிலும் இன்னும் சுமார் 10 வருடங்களுக்கு மக்களிடையே பிரசங்கம் செய்ய அடியேனுக்கு உடலில் சக்தியை இறைவன் அருளியிருக்கிறான் என நம்புகிறேன்.

நாட்டு மக்களிடையே நமது மத இலக்கியங்களுக்கான பிரசாரம் போதவில்லை. இராமாயணம் - பாரதம் போன்ற நூல்கள் நிறைய உள்ளன. எனவே இதுவரை போதுமான அளவு பிரசாரம் செய்யப் பெறாத பல நூல்களைப் படித்துக் குறிப்பெடுத்து (இராமாயணம் 48 தலைப்புகள் - திருவிளையாடற் புராணம் 12 தலைப்புகள் தவிர) சுமார் 108 தலைப்புகளில் பல நூல்களைப் பற்றிப் பேசுவதற்காக அடியேன் தயார் செய்து கொண்டு வருகிறேன்.

நாட்டு மக்களிடையே நல்ல பிரசாரம் இல்லாததாலும் அரசாங்கத்தின் அலட்சியம் காரணமாகவும் நம் மதத்தின் பெருமை சிறிது பாதிக்கப்பட்டுள்ளது. பிற மதத்தினர் தமது மத நூல்களில் உள்ள உண்மைகளைச் சிறு சிறு அறிக்கைகள் மூலம் அச்சிட்டு வெளியிடுவது கண்டு நாம் ஆத்திரமடைவதில் பயனில்லை. நாமும் அதே முறையில் அறிக்கைகள், சொற்பொழிவுகள் மூலம் பிரசாரம் செய்தால் நிலைமை சரியாகிவிடும்.

பிற மதத்தினர் நம் மதத்திற்கு மாறி ரைவேணுமென்றும் நம் மதம் அதனால் விரிவாகப் பரந்து விளங்க வேணுமென்பது நமது மதத்தின் குறிக்கோள் அல்ல. மனிதன் எந்த மதத்தில் பிறக்கிறானோ அதிலிருந்தே அவன் ஆண்டவனை அடைய முடியும் — எல்லா நதிகளும் கடலை அடைவது போல் — எல்லா வழிகளும் ஒரே தெய்வ சக்தியை அடைகின்றன எனப் பிற மதங்களையும் மதித்து நடப்பது இந்து மதத்தின் பெருமை.

எனவே நம் மத நூல்களை மக்களிடையே நன்கு பிரசாரம் செய்வதையே எனது வருங்காலத் திட்டமாக அமைத்துக் கொண்டுள்ளேன். எனது சேவையை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு பாரத நாட்டிலுள்ள எல்லா ஸ்தாபனங்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன். சென்னை நகரத்தில் மட்டும் ''வீடுதோறும் தெய்வக்கலை விளக்கம்'' என்ற பிரசாரம் ஆரம்பிக்கிறேன். இலவச சேவை விவரம் எழுதியறிக.

என் சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வதற்கான விவரங்கள்

1. எந்த ஊரில் எந்த விஷயம் பற்றி, எத்தனை நாள் பேச வேண்டுமென்ற விபரம் எழுதவும் நான் ஒரு உதவியாளருடன் வருவேன். இருவருக்கு வசதி செய்ய வேணும்.
2. வந்தனோபசாரம், வரவேற்பு, மாலையிடுதல் முதலான சடங்குகளில் நேரத்தை வீணாக்க வேண்டாம்.
3. ஏதாவது ஒரு தெய்வத்தின் படத்தைத் தலைமையாக வைக்கவும்.

4. போகவரச் சிலவும், ஊதியம் பற்றி அவ்வப்போது தீர்மானித்துக் கொள்ளலாம். சேவைதான் மிக முக்கியம். எனக்கு வரும் வருமானம் பூராவும் ஸ்ரீராம கோடி அருச்சனைக்கு செய்யப் பெறுகிறது. குடும்பத்தை என் மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டனர். ஆதலால் ஏற்பாடு செய்யக் கூடியவர்கள் சொற்பொழிவிற்கு சம்பாவனையும், கோடி அருச்சனைக்கு உபகாரம் செய்த பலனையும் அடைகிறார்கள்.

5. பட்டிமன்றம், வழக்காடு மன்றம் இவை நம் நூல்களின் தெய்விக நிலையை குறைக்கும் என்பது என் எண்ணம். எனவே அவைகளுக்கு அழைக்க வேண்டாம்.

6. எனக்கு எளிய முறையில் தங்குதற்கும், ஆகார வசதிகளும் செய்தால் போதும்.

7. எனது தினசரி பூஜைக்கான மலர்கள் முதலானவை யளித்தால் நலம்.

8. நல்ல விளம்பரத்துடன் எளிய முறையில் ஏற்பாடு செய்க.

9. பல நூல்களில் குறிப்பெடுத்து சுமார் 108 விஷயங்கள் பற்றிப் பேச ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறேன். 108 விஷயங்கள் தயாரானதும் விபரம் அச்சிட்டு அனுப்புகிறேன்.

10. அன்பர்கள் தங்களிடம் உள்ள செய்யுள் வடிவத்தில் தமிழ் நூல்களைப் பரிசாக அளித்து உதவினால் பிரசாரத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளுவேன்.

தமிழ் மணம் - பக்தி நெறி இவற்றைப் பரப்ப முழு மூச்சுடன் வேலை செய்வோம். இந்த அறிவிப்பைப் பிற அன்பர்களிடமும் காட்டிப் பல இடங்களில் ஏற்பாடு செய்யவும். எல்லா சொற்பொழிவாளர்களும் இம்மாதிரி சேவை ஆரம்பித்தால் நம் புராதன மதம் மேன்மையடையும்.

ஆண்டவன் அருள்க

3. இராமகாதை நடைபெற்ற இடங்கள்

(தேதி விவரம் நேரில் அறியலாம்)

1. மதுரை 2. அருவங்காடு 3. மதுரை 4 & 5. கோயம்புத்தூர் 1943 6. விருதுநகர் 7 to 9. மதுரை 1949 10 & 11 திருச்சி 12. அவிஞசி 13. மேட்டுப்பாளையம் 14. ஊட்டி 15. மோயர் 16. மசினக்குடி 17. அருவங்காடு 1950 18. அவிஞசி 19 & 20. திருப்பூர் 21. பங்களூர் 22 கோபி 23. கூகலூர் 24. அவிஞசி 25. சத்யமங்கலம் 26 to 28. கோயம்புத்தூர் 29. மௌன்ட் பிளஸன்ட் 30. வெலிங்க்டன் 31. கூனூர் 1951 32. ஊட்டி 33. மோயர் 34. ஈரோடு 35 to 39. திருச்சி 40. மகாதானபுரம் 41 to 44 புதுக்கோட்டை 1952 45. புதுக்கோட்டை 46. அரிமளம் 47. சேலம் 48. புதுக்கோட்டை 49. திருச்சி 50. திருமயம் 51 & 52. ஆலங்குடி 53. வடகாடு 54. கானடுகாத்தான் 55. அரூர் 56. நாகப்பட்டினம் 57. புதுக்கோட்டை 1953 58. கீரனூர் 59 & 60. காரைக்குடி 61. அதிராம்பட்டினம் 62. புதுக்கோட்டை 63. கோழிக்கோடு 64. கோயம்புத்தூர் 65. மேட்டுப்பாளையம் 66. பாபநாசம் 67. ரங்கநாதபுரம் 68. அய்யம்பேட்டை 69 & 70. திருக்காட்டுப்பள்ளி 71. மெலட்டூர் 72. திருக்காட்டுப்பள்ளி 73. புதுச்சத்திரம் 74. மேட்டூர் அணை 75. மேவாணி 1954 76. கண்டனூர் 77. கடலூர் 78. குரோம்பேட்டை 79. சி.என்.பாளையம் 80. மேல்குமாரமங்கலம் 81. அரியலூர் 82. புதுவயல் 83. ஆத்தூர் (மதுரை) 84. திண்டுக்கல் 85. விருதுநகர் 86. ஸ்ரீரங்கம் 1955 87. தூத்துக்குடி 88. மாம்பலம் 89. சின்ன சேலம் 90 to 92. டாடா நகர் 93. திருவையாறு 94. கும்பகோணம் 95. தேவகோட்டை 96. ஆத்தூர் (சேலம்) 97. திருவிடைமருதூர் 98. கும்பகோணம் 99. எர்ணுகுளம் 1956 100. பூந்தமல்லி 101. சிதம்பரம் 102. சிந்தாதிரிப்பேட்டை 103. மாம்பலம் 104. புதுடில்லி 105. ரிஷிகேசம் 106. ஜமால்பூர் 107. டாடாநகர் 108. கல்கத்தா.

இரண்டாவது பிரதிக்ஞை

1956 109. ஹிராகூட் 110. ராக்பூர் 111. மன்னார்குடி 112. வடுவூர் 113. எட்டையபுரம் 114. சேலம் 115.

ராசிபுரம் 116. சிவகாசி 1957 117. மே. மாம்பலம் 118. விசாகப்பட்டினம் 119. பங்களூர் 120. ஊரிகாம் 121. தண்டையார்பேட்டை 122. மதுக்கூர் 123. ஸ்ரீராமகதா நிலயம் 124. தேவகோட்டை 125. ஊரிகாம் 126. பாளையங்கோட்டை 1958 127. திருநெல்வேலி 128. இராமநாதபுரம் 129. கர்கி 130. திருவனந்தபுரம் 131. தஞ்சாவூர் 132. புதுக்கோட்டை 133. விழுப்புரம் 134. புதுப்பட்டி 135. கூனூர் 136. & 137. வேலூர் 138. திருப்பத்தூர் (என். எ.) 1959 139. உடுமலைப்பேட்டை 140. எமரால்ட் 141. அரக்கோணம் 142. பங்களூர் 143. & 144. சென்னை 145. பங்களூர் 146. கும்பகோணம் 147. மேட்டுபாளையம் 148. புதுக்கோட்டை 1960 149. உடுமலைப்பேட்டை 150. கரூர் 151. நெய்வேலி 152. மாயனூர் 153. கொழிஞ்சிவாடி 154. புதுக்கோட்டை 155. திருப்பூர் 156. தாராபுரம் 157. கோயம்புத்தூர் 158. பொள்ளாச்சி 1961 159. மே. மாம்பலம் 160. ரெட்டியாரூர் 161. ராமநாதபுரம் 162. திருப்பூர் 163. காட்டுப்புத்தூர் 164. மதுரை 165. திருச்சி 166. துலுக்கப்பட்டி 167. போபால் 168. ஜபல்பூர் 1962 169. கொப்பனபட்டி 170. மேலச்சிவபுரி 171. கண்டவராயன்பட்டி 172. நெய்வேலி 173. தூத்துக்குடி 174. & 175. சென்னை (28 & 17) 1963 176. சென்னை (1) 177. பம்பாய் 178. சென்னை (1) 179. பனையபட்டி 180. சிறுகமணி 181. நங்கவரம் 182. பொள்ளாச்சி 183. டாப்ஸ்லிப் 1964 184. திம்மாச்சிபுரம் 185. புளியம்பட்டி 186. அத்திக்கடவு 187. தூத்துக்குடி 188. சென்னை (23) 189. மதுரை 190. கோயம்புத்தூர் 1965 191. திருப்பத்தூர் (ஆர். டி.) 192. எர்ணாகுளம் 193. உரத்தநாடு 194. கொச்சி 195 & 196. சென்னை (30 & 38) 197. ஊட்டி 198. திருச்சி 199. பெருங்குளம் 1966 200 திருச்சூர் 201. நாகர்கோயில் 202 நெய்வேலி 203. ஈரோடு 204. திருப்பூர் 205. மிதிலைப்பட்டி 206. லால்குடி 207. திருச்சி 208. கோயம்புத்தூர் 209. முசிறி 210. புதுக்கோட்டை 1967 211. கோவை 212. தொட்டியம் 213. நாமக்கல் 214. ரூர்கேலா 215. ஈரோடு 216. அரக்கோணம்.

மூன்றாவது பிரதிக்ஞை

1967 217. துறையூர் 218. ஊட்டி 219. ஸ்ரீமுஷ்ணம் 220. அம்மங்குடி 221. லால்குடி 1968 222. சென்னை (28)

223 புதுக்கோட்டை 224 பொள்ளாச்சி 225 பங்களூர் 226 சிதம்பரம் 227 நெய்வேலி 1969 228 மாயவரம் 229 பங்களூர் 230 புதுடெல்லி 231 சிதம்பரம் 232 ஒரத்த நாடு 233 சென்னை (5) 234 கிருஷ்ணகிரி 1970 235 புதுக் கோட்டை 326 கும்பகோணம் 237 ரூர்கேலா 238 திருச்சி 239 நன்னிலம் 240 பெரியகுளம் 241 கோயம்புத்தூர் 242 திருவையாறு 243 புதுக்கோட்டை 1971 244 கிணத்துக் கடவு 245 குளித்தலை 246 மதுரை 247 பொள்ளாச்சி 248 அன்னூர் 249 கோயப்புத்தூர் 250 to 252 சென்னை (27, 84, 57) 253 சிவகாசி 1972 254 பங்களூர் 255 சிதம்பரம் 256 நெய்வேலி 257 சென்னை (27) 258 காஞ்சிபுரம் 259 புதுடில்லி 260 திருவனந்தபுரம் 1973 261 கோபி 262 ரெட்டியாரூர் 263 சென்னை (15) 264 அன்னூர் 265 திருநெல்வேலி 266 சென்னை 267 ஊட்டி 268 ஒனுப் பாளையம் 269 புதுக்கோட்டை 270 தொண்டாமுத்தூர் 1979 271 சுண்டப்பாளையம் 272 நாமக்கல் 273 பாளையங்கோட்டை 274 & 275 மதுரை 276 கிருஷ்ண கிரி 277 நாமக்கல் 278 திருநெல்வேலி 1975 279 ஈரோடு 280 கடலூர் 1975 281 ஸ்ரீரங்கம், 282 மதுக்கூர், 283 கடலூர் 1976 284 பாரமடையூர், 285 விசாகப்பட்டினம் 286 திருவெறும்பூர் 287 தேவனூர் புதூர் 288 கடலூர் 289 ஸ்ரீரங்கம் 290 ஸ்ரீனிவாசநகர் 291 அகமதாபாத் 292 மதுரை 293 ராஜேந்திரம் 1977 294 மாயூரம் 295 நன்னி லம் 296 அன்னூர் 297 பங்களூர் 298-299-300 சென்னை 301 திருப்பூர் 302 கிணத்துக்கடவு 1978 303 நங்கவரம் 304 சென்னை 305 சிதம்பரம் 306 பொள்ளாச்சி 307 பங்களூர் 308 புவனகிரி 309 சேலம் 310 புதுக்கோட்டை 1979 311 சென்னை 312 திருக்கோயிலூர் 313 தாராபுரம் 314 கரூர் 315. ராமசாமிராஜா நகர் 1980 316-317-318. சென்னை 319. திருச்சி 320. சென்னை 321 உதக மண்டலம் 322. சென்னை 323 கள்ளிடைக்குறிச்சி 1981 324 ரூர்கேலா 324-A கடலூர், 324-B. சுண்டப் பாளையம் 324-C. ஜயப்பூர் 324-D. சென்னை 324-E சென்னை 325 விருதுநகர் 1983 326 புதுக்கோட்டை 327 பூனா 328 டால்மியாபுரம் 329. நெய்வேலி 330. குளித்தலை 331. பவானி 332. ஸ்ரீராமகதா நிலயம் 1984 333 குரோம்பேட்டை 334 லக்ஷ்மிநகர் சென்னை-61 335 சிவகங்கை 336 ஈரோடு. 337. தில்லைகங்கா நகர் சென்னை-61 338 சைதாப்பேட்டை.

(குறிப்பு: அடியேனது ஸ்தாபனமான ஸ்ரீராமகதாசத் சங்கத்தின் கிளைகளில் 277, 288, 289, 290, பட்டாபிஷேகங்

களுக்கான கதைகள் விரிவான முறையில் விட்டுவிட்டு நடப்பதால் 277க்குப் பதிலாக 324 ஐயும் 288க்குப் பதில் 324 A ஐயும் 289க்குப் பதில் 324-B ஐயும் 290க்குப் பதில் 324- C ஐயும் பூர்த்தி செய்யப்பட்டது.)

339. ஷெனாய் நகர் 340. பாலக்காடு 341. நங்கநல்லூர் 342. கிருஷ்ணராயபுரம் 343. நங்கநல்லூர். 344. ரெட்டியாரூர். 345. சுண்டப்பாளையம் 346. சென்னை-87 347. மேட்டுப்பாளையம் 348 சென்னை-61 349 கோவை-7 350 சத்யமங்கலம்.

Programmes after this book was printed

14

351 Ambattur 352 Pon. Puduppatti. 353 Thillaigunganagar 354 Minjur 355 Udumalpet 356 E Tambaram. 357. Thillaiganganagar

4. பட்டங்கள் பெற்ற விவரங்கள்

1. ஸ்ரீராமகதா ரத்னம்: தமது 27 வது கம்பராமாயணச் சொற்பொழிவு 4-9-50 அன்று கோவை தெலுங்கு பிராமணாள் வீதியில் முடிவடைந்தபோது இந்திய வாலிபர் சங்கத்தின் சார்பாக கோவை நவ இந்தியா (அந்நாள் ஆசிரியர் திரு ராமஸ்வாமி அவர்களால் அளிக்கப்பட்டது.)

2. கம்பர் கவி முழக்கம்: தஞ்சை ஜில்லா ரங்கநாதபுரத்தில் 19-8-53 முடிவடைந்த 67 வது பட்டாபிஷேகத்தின்போது தமிழ் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்களின் சிடர் திரு திராவிடக்கவிமணி முத்துஸ்வாமி அய்யர் M. A. L. T. அவர்களால் அளிக்கப்பட்டது.

3. கம்பன் வல்லான்: திருக்காட்டுப்பள்ளியில் நடைபெற்ற 70 வது பட்டாபிஷேகத்தின்போது 7-10-1953 அன்று பொதுமக்கள் சார்பாக P. S. ஹைஸ்கூல் தலைமையாசிரியர் ஸ்ரீமான் S. R. பாலசுப்ரமணிய அய்யர் அவர்களால் அளிக்கப்பட்டது.

4. கம்பன் கவிச்சந்த மேகம்: மதுரை ஜில்லா ஆத்தூர் திவ்ய ஜீவன சங்கம், ஸ்ரீராம பஜன சங்கம் இவற்றின்

ஆதரவில் நடைபெற்று 6-8-54 அன்று முடிவடைந்த 83 வது பட்டாபிஷேகத்தின்போது திருவாளர் மதுரகவி ராதா கிருஷ்ணய்யர் அவர்களால் அளிக்கப்பட்டது.

5. கம்பன் கதிரொளி: விருதுநகர் காரைக்காலம் மையார் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 85-வது பட்டா பிஷேகத்தின்போது மேற்படி சங்கத்தின் சார்பில் 14-11-54 அன்று அளிக்கப்பட்டது.

6. கம்பன் கவிச்செல்வன்: கும்பகோணம் ஸ்ரீ சங்கர மடத்தில் நடந்து 10-11-55 அன்று முடிவடைந்த 98 வது பட்டாபிஷேகத்தின்போது நகர மக்கள் சார்பில் அளிக்கப் பட்டது.

7. கம்பன் அபிநவ காளமேகம்: சிதம்பரம், திவ்ய ஜீவன சங்கத்தில் 101 வது பட்டாபிஷேகம் நிறைவேறிய 19-2-56 அன்று அளிக்கப்பட்டது.

8. கம்பராமாயண ஜோதி: ரிஷிகேசத்தில் ஸ்ரீசுவாமி சிவானந்தா அவர்கள் முன்னிலையில் 16-4-56 முதல் 2-5-56 வரை நடைபெற்ற 105 வது பட்டாபிஷேக முடிவில் ஸ்ரீயோக வேதாந்த ஆரண்ய சர்வகலாசாலே (The Yoga Vedanta Forest University Rishikesh) சார்பில் ஸ்ரீசுவாமி சிவானந்தா அவர்களால் அளிக்கப்பட்டது

9. முத்தமிழ் வித்தகர்: ராபர்ட்சன் பேட்டை (K.G.F.) யில் நடந்து 21-11-57 அன்று முடிவடைந்த 126 வது பட்டாபிஷேகத்தில் அவ்வூர் வித்வான் திரு ஆறுமுகனர் அவர்களால் அளிக்கப்பட்டது.

10 கம்பக் கலைமணி: எனது சுந்தரகாண்டப் புத்தகத்தைப் படித்து மகிழ்ந்து ஸ்ரீ சுத்தானந்த பாரதி அவர்கள் அளித்தது.

11. கம்ப நாடகக் கலைஞன்: சென்னை ராஜா அண்ணா மலைபுரத்தில் ஸ்ரீ ச்ருங்கேரி பிரவசன மந்திரத்தில் நடைபெற்று 11-2-1968 அன்று முடிவடைந்த 222-வது பட்டாபிஷேகத்தின் போது சென்னை கம்பர் கழகம் சார்பில் அளிக்கப் பெற்றது.

12. கம்பன் முத்தமிழ்க் கடல்: பெரியகுளம் திவ்ய ஜீவன சங்கத்தில் 12-7-70 அன்று நடைபெற்ற 240-வது பட்டாபிஷேகத்தில் அளிக்கப்பெற்றது.

13. கம்பன் சீர் பரவுவார்: என்ற பட்டம் புதுக் கோட்டை இலக்கிய பேரவையினரால் 7-9-71 அன்று அளிக்கப்பட்டது.

14. கம்பன் கவிக் களஞ்சியம்: அகமதாபாத் வைதிக சமாஜத்தில் 13-11-1976 பூர்த்தியான 291வது பட்டாபி ஷேகத்தில் அளிக்கப்பட்டது.

15. ஸ்ரீராமகதா அமிர்த வர்ஷிணி: மதுரை ஷெனாய் நகர் ஆஞ்சநேயர் கோயிலில் 20-12-1976 அன்று பூர்த்தி யான 292 வது பட்டாபிஷேகத்தில் அளிக்கப்பெற்றது.

16. ஸ்ரீ ஜகத்குரு காஞ்சிகாமகோடிபீடம் 19-1-1977 அன்று "ஸ்ரீ ராமகதா ப்ராண" எனப் பட்டம் அருளி ஆசி கூறினார்கள்.

17. அபிநவ கம்பன்: சென்னை ஆழ்வார் திருநகர் ஹரிபீடத்தில் 12-3-1980 அன்று பூர்த்தியான 316-வது பட்டாபிஷேகத்தில் அளிக்கப்பெற்றது.

18. கம்பராமாயணக் கவிக்குயில்

19. கம்பன் கவிநயமணி என்ற பட்டங்கள் 12-5-85 பாலக்காடு கல்பாத்தி இளைஞர் சங்கத்தில் 340வது பட்டாபி ஷேகம் பூர்த்தியானபோது அளிக்கப்பட்டது.

பொன்னாடை போர்த்தப்பட்ட விவரங்கள்

1. தேவகோட்டையில் அடியேனுடைய 124-வது இராமாயண பிரசங்கமும் திருவிளையாடற்புராணப் பிரசங் கமும் சேர்ந்து நடைபெற்றன. 9-9-57 அன்று இரவு நடந்த மீனாட்சி கல்யாணத்தில் தேவகோட்டை ஸ்ரீ அ. க. வீர. கண்ணப்பச் செட்டியாரவர்களால் போர்த்தப்பட்டது.

2. இராமநாதபுரத்தில் நடைபெற்ற 128-வது இராமாயாண பட்டாபிஷேகத்தில் 25-3-58 அன்று இராமநாதபுரம் திவான் ஸ்ரீ பாலாஜிராவ் அவர்களால் போர்த்தப்பட்டது.

3. உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற 129-வது இராமாயண பட்டாபிஷேகத்தில் 4-3-59 அன்று பொது மக்கள் சார்பில் ஸ்ரீ. வி. ஸ்ரீனிவாசன் அவர்களால் போர்த்தப்பட்டது.

4. விழுப்புரம் திவ்ய ஜீவன சங்கத்தில் நடைபெற்ற 20-9-59 அன்று முடிவடைந்த திருவிளையாடற் புராணப் பிரசங்கத்தின்போது கனம் மந்திரி ஸ்ரீ பக்தவச்சலம் அவர்களால் போர்த்தப்பட்டது.

5. கும்பகோணம் தியாகப்ரம்ம சபையின் ஆதரவில் நடைபெற்ற 146-வது இராமபட்டாபிஷேகத்தின் முடிவில் 23-10-59 அன்று கனம் மந்திரி ஸ்ரீ பக்தவச்சலம் அவர்களால் போர்த்தப்பட்டது.

6. பொள்ளாச்சி தாலுகா ரெட்டியாரூரில் நடைபெற்ற 160 வது பட்டாபிஷேக முடிவில் 6-2-1961 அன்று ஸ்ரீ திருமலைச்சாமி B. A. அவர்களால் போர்த்தப்பட்டது.

7. இராமநாதபுரத்தில் நடைபெற்ற 161-வது பட்டாஷேக முடிவில் 2-3-1961 அன்று இராமநாதபுரம் ஸ்ரீ ஷண்முக ராஜேஸ்வரி சேதுபதி மகராஜா அவர்களால் போர்த்தப்பட்டது.

8. உடுமலைத் தாலுகா தேவனூர் புதூரில் நடைபெற்ற திருவிளையாடற் புராணப் பிரசங்கத்தின் முடிவில் அரசமரத்துத் தோட்டம் ஸ்ரீ சண்முகவேல் கவுண்டர் அவர்கள் சார்பில் பொள்ளாச்சி M. L. A. ஸ்ரீ N. மகாலிங்கம் B. Sc. அவர்களால் 14-3-61 அன்று போர்த்தப்பட்டது.

9. திருச்சி ஜில்லா கொப்பணபட்டியில் ஸ்ரீ மு. ப. நாராயணன் செட்டியார் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற 159வது பட்டாபிஷேக முடிவில் 15-1-62 அன்று ஸ்ரீ மு.ப. நாராயணன் செட்டியார் (Chairman, India Leather Corporation, Madras) அவர்களால் போர்த்தப்பட்டது. 2

10. சென்னை ராஜா அண்ணாமலைபுரம் ஸ்ரீமான் வைத்ய சுப்ரமணிய அய்யர் அவர்களின் ஆதரவில் நடைபெற்று முடிவடைந்த 174 வது பட்டாபிஷேகத்தின்போது 14-8-62 அன்று கனம் மந்திரி ஸ்ரீ பக்தவச்சலம் அவர்கள் தலைமையில் ஸ்ரீ செட்டிநாடு அரசர் ஸ்ரீ ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்களால் போர்த்தப்பட்டது.

11. பொள்ளாச்சி மாரியம்மன் கோயிலில் நடைபெற்று 19-10-63 அன்று முடிவடைந்த 182-வது பட்டாபிஷேகத்தில் முன்னாள் அமைச்சர் திரு. டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தலைமையில் ஸ்ரீ வயலூர் சுவாமிகள் மத்திய அரசாங்க மந்திரி ஸ்ரீமதி லட்சுமிமேனன் அவர்கள் முன்னிலையில் பொள்ளாச்சி ஸ்ரீ என்.மகாலிங்கம் எம்.எல்.ஏ. அவர்களால் போர்த்தப்பட்டது.

12. கோவை ஆர். எஸ். புரம் திவான் பகதூர் ரோட் ரத்ன விநாயகர் கோயிலில் நடைபெற்ற 190வது இராமாயணச் சொற்பொழிவு நடைபெற்ற பின் 10-12-64 அன்று திரு எம். எஸ். ஜகன்னாதய்யங்கார் அவர்களால் போர்த்தப்பட்டது.

13. சென்னை-38 I. C. F. கமலவிநாயகர் சத் சங்கத்தில் 12-8-65 அன்று நடைபெற்ற ஸ்ரீ மீனாட்சி கல்யாணம் வெளியீட்டு விழாவில் செட்டி நாட்டரசர் அவர்களின் காரியதரிசி ஸ்ரீ வி. வைத்யசுப்ரமணிய அய்யர் அவர்களால் போர்த்தப்பட்டது.

14. 23-3-66 அன்று இரவு நாகர்கோயிலில் நடைபெற்ற 201 வது பட்டாபிஷேக விழாவில் பொதுமக்கள் சார்பில் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களால் பொன்னாடை போர்த்தப்பட்டது.

15. 14-10-66 வெள்ளியன்று இரவு கோவை R. S. புரம் குருகுகான சபையரால் 208 வது ஸ்ரீ ராம பட்டாபிஷேகத்தின் முடிவில் ஸ்ரீ M. S. ஜகந்நாதய்யங்கார் அவர்களைக் கொண்டு போர்த்தப்பட்டது.

16. சென்னை ராஜா அண்ணாமலைபுரம் ஸ்ரீ ஸ்ருங்கேரி பிரவசன மந்திரத்தில் நடைபெற்று 11-2-1968 முடிவடைந்த 222 வது பட்டாபிஷேக முடிவில் சென்னை கம்பர் கழகம் சார்பில் போர்த்தப்பட்டது.

17. சிதம்பரத்தில் 16-6-1968 அன்று முடிவடைந்த 226வது பட்டாபிஷேகத்தில் சபாநாயகர் கோயில் சார்பாக போர்த்தப்பட்டது.

18. கோயம்புத்தூரில் 5-5-71 அன்று நிறைவேறிய 249 வது பட்டாபிஷேகத்தில் லஷ்மி மில்ஸ் - திரு வெங்கிட சுவாமி நாயுடு அவர்களால் போர்த்தப்பட்டது.

19. சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் 28-9-71 அன்று நிறைவேறிய 250 வது பட்டாபிஷேகம் நம் ஸ்ரீமத் சம்பூரண ராம கதா சாகர புத்தக வெளியீட்டு விழாவில் ஸ்ரீமான் திரு வைத்ய சுப்பிரமணிய அய்யர் அவர்களால் போர்த்தப்பட்டது.

20. சிதம்பரத்தில் 8-4-72 அன்று நிறைவேறிய 255 வது பட்டாபிஷேகத்தில் Dr திரு. அரங்கசுவாமி அவர்களால் போர்த்தப்பட்டது.

21. நெய்வேலியில் 14-5-72 அன்று நிறைவேறிய 256 வது பட்டாபிஷேக விழாவில் அருள் நெறி சங்கத்தினரால் போர்த்தப்பட்டது.

22. ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காமகோடி சங்கராசார்ய மகா சன்னிதானம் அவர்கள் 6-7-72 அன்று மாயூரத்தில் ஒரு பட்டு சால்வையளித்து ஆசி கூறினார்கள்.

23. காஞ்சிபுரத்தில் 26-10-72 நிறைவேறிய 258 வது பட்டாபிஷேகத்தில் ஸ்ரீ காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ ஆசாரியாள் ஒரு சால்வையளித்து அனுக்ரஹித்தார்கள்.

24. திருவனந்தபுரம் ஸ்ரீ சீதாராமபக்த சபாவில் நடைபெற்ற 260 வது பட்டாபிஷேகத்தன்று 28-12-72 போர்த்தப்பெற்றது.

25. ரெட்டியாரூரில் (பொள்ளாச்சி) நடைபெற்ற 262 வது பட்டாபிஷேகத்தில் (2-2-73 to 16-2-73) திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களால் போர்த்தப்பெற்றது.

26. சென்னை சைப்பேட்டையில் நடைபெற்ற 263-வது பட்டாபிஷேகத்தில் 12-4-73 அன்று போர்த்தப்பெற்றது.

460

27. திருநெல்வேலி N. G. O. காலனியில் நடைபெற்ற 265 வது பட்டாபிஷேகத்தில் முருகன் கோவிலாரால் 20-6-73 அன்று போர்த்தப்பெற்றது.

28. பாளையங்கோட்டை போபால சுவாமி கோவிலில் நடைபெற்ற 273 வது பட்டாபிஷேகத்தில் ஸ்ரீராம் பாபுலர் திரு M.S. சுந்தரம்பிள்ளை அவர்களால் போர்த்தப்பெற்றது.

29. ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ ஸ்ருங்கேரி சங்கராசார்ய மகா சன்னிதானம் அவர்கள் 28-6-72 அன்று ஒரு தங்க மெடலும் சால்வையும் அளித்து ஆசி கூறினார்கள்.

30. கோவை ஜில்லா, பாரமடையூரில் 4-4-76 அன்று நமது 284 வது பட்டாபிஷேகம் பூர்த்தியானபோது திரு ஷண்முக சுந்தரக் கவுண்டர் அவர்கள் குடும்பத்தாரால் போர்த்தப்பெற்றது.

31. தேவனூர் புதூரில் 21-5-76 அன்று 287 வது பட்டாபிஷேகத்தில் திரு சண்முக கவுண்டர் குடும்பத்தாரால் போர்த்தப்பட்டது.

32 & 33 சிதம்பரம் சபாநாயகர் கோவில் சார்பில் பூஜ்யஸ்ரீ தில்லைவாழ் அந்தணர்கள் சார்பில் ஒன்றும், வக்கீல் பூஜ்ய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஐயரவர்கள் குடும்பத்தாராலும் 305 வது பட்டாபிஷேகம் 25-4-78 அன்று பூர்த்தியான போது போர்த்தப்பெற்றது.

34. பொள்ளாச்சியில் 16-5-1978 அன்று பூர்த்தியான 306 வது பட்டாபிஷேகத்தின் போது திரு. N. மகாலிங்கம் அவர்கள் சார்பில் போர்த்தப்பெற்றது.

35. சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் 11-8-82 பூர்த்தியான 324 வது பட்டாபிஷேகத்தின்போது ஸ்ரீமான் தர்மாத்மாஸ்ரீ வைத்ய சுப்ரமண்ய ஐயர் அவர்கள் குடும்பத்தாரால் போர்த்தப்பெற்றது.

36. விருதுநகர் காரைக்கால் அம்மையார் சங்கத்தில் 22-8-82 அன்று 325 வது பட்டாபிஷேகம் பூர்த்தியான போது போர்த்தப்பெற்றது.

37. சிவகாசி திருப்புகழ் மாதர் சபையினரால் 17-12-82 அன்று போர்த்தப்பட்டது.

38. சென்னை - தில்லை கங்கா நகர் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி கலைக்கழகத்தினரால் 8-4-83 அன்று போர்த்தப் பெற்றது.

39. புனா அருகிலுள்ள டெஹூரோடு இந்து சமய மன்றத்தினரால் 18-4-83 அன்று போர்த்தப்பெற்றது.

40. சிதம்பரம் சபாநாயகர் திருக்கோவில் தில்லை மூவாயிரவரால் 15-8-83 அன்று போர்த்தி அனுக்ரகம் செய்யப்பெற்றது.

41. சிதம்பரம் தில்லைவாழ் அந்தணர்களால் 3-2-85 அன்று நம் 'பெரிய புராணம்' புத்தகம் வெளியிடப்பட்ட போது போர்த்தப்பட்டது.

42. 16-12-87: ஸ்ரீ ஜகத்குரு ஸ்ருங்கேரி சன்னிதானம் ஸ்ரீபாரதி வித்யா தீர்த்த சுவாமிகள் 16-12-87 அன்று திருவான்மியூரில் ஒரு சால்வை அளித்து அனுக்கிரகித்தார்கள். இது இரண்டாவது அனுக்கிரகம்.

6. தங்கமெடல்கள் பெற்றவிபரங்கள்

1. திருச்சி பாலக்கரையில் 8-8-51 முடிந்த 37-வது பட்டாபிஷேகத்தில் திரு V. K. A. ரங்கநாதக்கோனார் அவர்கள் தங்கமெடல் பரிசளித்தார்கள்.

2. கனம் ஸ்ரீ எட்டையபுரம் மகாராஜா அவர்களால் 15-11-56 அன்று எட்டையபுரத்தில் முடிவடைந்த 113-வது பட்டாபிஷேகத்தில் அளிக்கப்பெற்றது.

3. பாளையங்கோட்டையில் 15-12-57 அன்று நடைபெற்ற 123-வது பட்டாபிஷேகத்தில் அளிக்கப்பெற்றது.

4. சென்னை ஷெனாய் நகரில் 6-8-65 அன்று நடைபெற்ற பிரசங்கங்களின் முடிவில் திரு பாலஷண்முகானந்தா சபையாரால் அளிக்கப்பெற்றது.

5. சிதம்பரத்தில் நடைபெற்ற 226-வது ராமாயண நிகழ்ச்சியின் நடுவில் 13-6-1968 புராணக் குழுவினரால் அளிக்கப்பெற்றது.

7. அடியேனது எழுத்துப்பணி

1. வேலுமயிலுந்துணை: என்ற தலைப்பில் கந்தரனுபூதி விளக்கம் எழுதி திரு சுத்தானந்த பாரதியார், திரு M. பக்தவத்சலம் ஆகியவர்களுடைய முகவுரையுடன் வெளியாகிய புத்தகம் அன்பர்களின் நல்லாதரவைப் பெற்றுள்ளது. பொள்ளாச்சி திரு N. மகாலிங்கம் அவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

2. ஐயப்பன் சரித்திரத்தை "சுவாமியே சரணம் ஐயப்பா" என்ற தலைப்பில் திரு சங்கரகிருபா பத்திரிகையில் தொடராக எழுதி முடித்து, கேரள முன்னாள் ஜில்லா நீதிபதி திரு சங்கர மேனோன் அவர்களின் முகவுரையுடன் வெளியிட்டு மேற்படி நூலின் விற்பனைத்துகை பூராவும் சபரி மலைக்குச் செல்லும் ஏழை யாத்திரிகர்களான கன்னி ஐயப்பன்மாருக்கு அளித்து வருகிறேன். இதுவரை சுமார்......15........ பேர்கள் சென்றுள்ளனர்.

3. அடியேன் சொற்பொழிவுக்கு நடுவில் பாடும் பாடல்கள் தோத்திரமாலை என்ற பெயரில் வெளியாகியுள்ளது.

4. அடியேன் "பாவை அருளிய பாமாலை" என்ற தலைப்பில் வெளியிட்ட திருப்பாவை (திரு அனந்தராம தீக்ஷிதர் அவர்களின் முகவுரையுடன்) புத்தகமும் 5 "சிவ நாமம் கேட்பாய் செல்வி" என்று மகுடமிட்ட திருவெம்பாவை (திரு கிருபானந்த வாரியார் அவர்களின் முகவுரையுடன்) புத்தகமும், சுமார் 660 பக்கங்களில் 6 ஸ்ரீமத் சம்பூர்ண ராமகதா சாகரம் என்ற தலைப்பில் திரு கிருபானந்த வாரியார் அவர்களின் முகவுரையுடன் வெளியிட்ட பெரிய புத்தகமும், அதற்கு முன்னால் வெளியான பாலகாண்டம், சுந்தரகாண்டம் புத்தகங்களும் தீர்ந்து விட்டன. யார் கேட்டாலும் சில சிறு நிபந்தனைகளின் பேரில் பதிப்புரிமை தரத் தயார். தோத்திரமாலைப் புத்தகம் கிடைக்கும்.

7. கலியுகக் கம்பர் எனப்பெயர் பெற்ற மகாவித்வான் திரிசிரபுரம் திரு மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் நூல்களை யாவரும் படித்து இன்புற வேணுமென்று கும்பகோணத்திலிருந்து வெளியாகும் "திருக்கயிலை" என்ற சஞ்சிகையில் தொடர் கட்டுரைகளாக எழுதி முடித்தேன். புத்தகமாக

வெளியிடும் நன்னாளை ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

8. ஸ்ரீ ஆதிசங்கராசார்யாள் அருளிச் செய்த பஜ கோவிந்தம் 9. ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம் ஆகியவைகளுக்கு திரு கோவை G. ராமநாதன் கவியரசு நடேச கவுண்டர் அவர்கள் எழுதிய தமிழ் மொழி பெயர்ப்புப் பாடல்களுடன் கட்டுரைகள் வடிவில் உரை எழுதி வெளியிடப் பெற்றுள்ளது. இவைகள் கிடைக்கும்.

10. திருவிளையாடற் புராணத்தை ''மதுரையின் மாண்பு'' என்ற தலைப்பில் எழுதி திரு கி. வா. ஜகன்னாதன் அவர்களின் முகவுரையுடனும் ஸ்ரீ ஸ்ருங்கேரி மகா சன்னிதானம் அவர்களின் ஸ்ரீ முகத்துடன் வெளியாகியுள்ளது.

11. திருத்தொண்டர் புராணத்தை அருள்மொழியமுது என்ற தலைப்பில் திரு கிருபானந்த வாரியாரவர்களின் முகவுரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

12. என்னையாட்கொள்ளும் தெய்வமான ஸ்ரீ சிவாகம வல்லி சமேத நடராஜ மூர்த்தியின் மூர்த்தி, தீர்த்த, தல விசேடங்கள் பற்றி ஒருபுஸ்தகம் எழுதிக்கொண்டிருக்கிறேன். சர்வ சுதந்திரமாக சபாநாயகர் கோயிலுக்கு அளிக்க எண்ணியுள்ளேன். அவர் அதை நிறைவேற்றிக் கொள்ள வேணும்.

13. இது தவிர பல பத்திரிகைகளிலும், மலர்களிலும் அடியேன் 45 வருடங்களில் ஆயிரம் கட்டுரைகள் எழுதியுள்ளேன். 600 கட்டுரைகள் என்னிடம் உள்ளன.

ஸ்ரீ ராமகதா சத் சங்கம் (SRS)

ஸ்ரீராமபிரானை விக்ரக உருவில் வழிபட வேண்டுமென்று ஆவல் கொண்டு ஒரு விக்கரகம் செய்து கோடி அர்ச்சனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. பல காரணங்களால் எனது புத்தக விற்பனைப் பணத்தை சொந்த உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளாமல், எவர் ஒரு செட் புத்தகம் வாங்குகின்றார்களோ அவர்கள் பெயரால் ஒரு சகஸ்ரநாமம் செய்யத் தீர்மானித்துள்ளேன். தற்சமயம் 35 லக்ஷங்கள் ஆகியுள்ளன. அன்பர்கள் நமது புத்தகங்களை வாங்கிப் பயனடைவதுடன் கோடி அர்ச்சனைக்கும் உதவ

வேண்டுகிறேன். கோடி அர்ச்சனை செய்ய வேண்டுமென்பதற்காகவே ''ஸ்ரீ ராமகதா சத் சங்கம்'' என்ற சங்கம் நிறுவப்பட்டுள்ளது. தாய்மார்கள் அர்ச்சனை செய்வதற்காக சுமார் ரூ. 2,000 செலவில் ஒரு ஜோடி வெங்கலக் குத்து விளக்கு வாங்கப்பெற்றது. தாய்மார்கள் இதுவரை 3 லக்ஷ்மி லக்ஷார்ச்சனைகளும், 1 சீதா லக்ஷார்ச்சனையும் செய்து முடித்துள்ளனர்; அர்ச்சனையை முடித்து விடுவார்கள் எனவும் எண்ணுகிறேன். ஸ்ரீ ராமகதா சத் சங்கத்திற்கு நாமக்கல், பாளையங்கோட்டை, கடலூர், ஸ்ரீரங்கம், மாயவரம் ஆகிய இடங்களில் கிளைகள் உள்ளன. நம் சொற்பொழிவுகளில் பழைய துணிகளை வசூல் செய்து சீர்செய்து ஏழைகளுக்குத் தருகிறோம். வருட ஆரம்பத்தில் ஏழை மாணவர்களுக்குச் சீருடையும், புத்தகங்களும் வழங்குகிறோம். அதற்காகத் தனி நிகழ்ச்சிகள் நடத்தி நானும், என் மனைவியும் மடியேந்திப் பணம் வசூல் செய்து இக்காரியங்களை நடத்துகிறோம். 50 கிளைகள் ஏற்படுத்தத் திட்டம். இறைவனின் அருள்! அன்பர்கள் எம் பணிகளுக்கு ஆதரவு தருக!

நமது வெளியீடுகளின் விற்பனைத் துகையைக் கொண்டே ஸ்ரீ ராமபிரானுக்கும் ஏனைய தெய்வங்கட்கும் லக்ஷார்ச்சனைகள் செய்வதற்கு என்றே ஆரம்பித்த இச்சங்கம் ஏழைகளுக்குச் சேவை செய்யத் திட்டமிட்டுக் கீழ்கண்ட சேவைகளைச் செய்து வருகிறது.

1. பழைய துணிகளைச் சேகரித்து சீர்செய்து ஏழைகளுக்கு அளித்தல். அன்பர்கள் தங்களிடமுள்ள பழைய புடவைகள், மற்ற உடைகளை நமக்கு அளித்து உதவலாம்.

2. எங்களுக்கு ஐந்து கிளைகள் உள்ளன. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அந்தந்த கிளைகளுக்குச் சென்று சொற்பொழிவு செய்து அதில் வரும் பணத்தில் பாதியை அந்தக் கிளைகளுக்கே அளிக்கிறோம். அந்தந்த வட்டாரத்திலுள்ள ஏழை மாணவர்கட்குச் சீருடையும், புத்தகங்களும் வழங்குகிறோம். ஐம்பது கிளைகள் திறக்கத் திட்டம் செய்துள்ளோம்.

3. அன்பர்கள் தங்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் விசேடங்களில் நம் பிரசங்கம் ஏற்பாடு செய்து இக்காரியத்திற்கு நிதி உதவலாம். இலவச நன்கொடை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. அன்பர்கள் தங்களிடமுள்ள பழைய புத்தகங்களையும் எங்களிடம் தந்தால் தக்கவாறு உபயோகித்துக் கொள்வோம்.

5. தமிழ், வடமொழிகளில் லக்ஷார்ச்சனை செய்கிறோம். தலைமையகம் 31 ராமலக்ஷார்ச்சனைகள், 3 முருக லக்ஷார்ச்சனை, 1 லலிதா லக்ஷார்ச்சனை, 1 வெங்கடாசலபதி லக்ஷார்ச்சனை, 1 சிதா லக்ஷார்ச்சனை செய்துள்ளது. ஸ்ரீரங்கம் கிளை ஒரு லக்ஷார்ச்சனை இராமனுக்கு செய்துள்ளது.

6. சென்ற 4 வருடங்களாக சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த அஸ்தினுபுரத்தில் இலவச வகுப்புக்கள் நடைபெறுகின்றன. கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம் முடிந்து தற்சமயம் பெரியபுராணம் நடைபெறுகிறது.

தவிர சைதாப்பேட்டையில் இலவச பெரிய புராண வகுப்பு நடைபெறுகிறது.

இதைத் தவிர சென்னையில் எமது இல்லமாகிய ஸ்ரீராம கதா நிலையத்தில் நிறைய இலவச வகுப்புக்கள் நடைபெறுகின்றன. பெண்களுக்கு, ஆண்களுக்கு எனத் தனித் தனியாக வகுப்பு நடத்துகிறோம். பல அன்பர்கள் பயனடைந்துள்ளனர். ஒருமுறை கம்பராமாயண வகுப்பு முடிந்துள்ளது. அன்பர்கள் சேர்ந்து பயனடைந்து இராமபிரான் அருள் பெறுக.

7. இதுதவிர வீடு வீடாக தெய்வீக இலக்கியங்களைப் பரப்புகிறோம். தேவையுள்ளவர்கள் நம் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். தயவுசெய்து கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

8. அவசரகால மருத்துவ உதவி, ஏழைத் திருமணங்களுக்கு உதவி செய்தல், ஏழைக் குழந்தைகளுக்குப் பால் அளித்தல் முதலான திட்டங்கள் வைத்திருக்கிறோம்.

9. பழைய நூல்கள் தவிர தற்கால தெய்வீக நூலாசிரியர்களின் நூல்களையும் பரப்புகிறோம். எல்லாப் பிரசங்கிகளுக்கும் எங்களாலியன்ற உதவி செய்ய எண்ணுகிறோம்.

10. அன்பர்கள் நமக்கு இன்னும் ஏதாவது திட்டம் கொடுத்தால் அதைக் கூடிய மட்டில் செயலாற்ற முயற்சிப்

போம். தெய்வ நம்பிக்கையுள்ள யாவருக்கும் எம்மால் இயன்ற சேவை செய்ய வேண்டுமென்பது எமது குறிக்கோள். அன்பர்கள் ஆதரவு தருக.

11. சென்னையிலிருந்து வெளியாகும் ஆண்டவன் அருள், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், குண்டூசி முதலான ஆன்மீகப் பத்திரிகைகளில் தெய்வீகக் கட்டுரைகள் எழுதி வருகிறேன். நம் கட்டுரைகளை விரும்புவோர் ஒருவாரம் முந்தி தலைப்பு முதலான விவரங்கள் கொடுத்து எழுதினால், கட்டுரைகள் அனுப்பிவைப்பேன்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

ஸ்ரீ ஜயசிதாராம்!

★